சுருக்கம்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் – 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மாணவ, மாணவியரை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் பட்டதாரி / முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பரிசு வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(பிந3)துறை

அரசாணை (நிலை) எண்.80

நாள்:22.12.2014
ஜய வருடம் – மார்கழி 07
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்கப்பட்டவை:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.பி1/4052/2014, நாள் 13.08.2014.

******

ஆணை:

2014–2015 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது பதிலளித்துப் பேசிய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கி வரும் 54 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மாணவ, மாணவியரை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5000/-- பரிசுத் தொகையாக மொத்தம் 10 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை சட்டமன்றப் பேரவையில் வெளியிட்டார்கள்.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், இத்துறையின் கட்டுப்பாட்டில், மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் பிரமலைக் கள்ளர் இனத்தவர் அதிக அளவில் வாழும் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் பிரமலைக் கள்ளர் இனத்தைச் சேர்ந்த மாணவ / மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக 289 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருவதாகவும், மேற்படி பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் 100 விழுக்காடு தேர்ச்சி பெறுவதற்கு அப்பள்ளியின் தலைமையாசிரியர் மட்டுமின்றி பள்ளியில் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களது பணியும் இன்றியமையாததாகும் என்றும், எனவே பாடங்களை சிறப்பாக போதித்து மாணவ, மாணவியரை அப்பாடப்பிரிவுகளில் 100 விழுக்காடு தேர்ச்சி அடையச் செய்யும் பட்டதாரி / முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களது மகத்தான பணியினை பாராட்டி ஊக்குவிப்பது மிகவும் இன்றியமையாததாகும் என்றும் தெரிவித்து, சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மாணவ, மாணவியர் பயிலும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் சிறப்பாக பணியாற்றி 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாணவ, மாணவியரை பாடப்பிரிவுகளில் 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை ஊக்குவித்து பாராட்டிடும் வகையில், அவர்களுக்கு தலா ரூ.5000/-- ஊக்கத் தொகை வழங்கலாம்

என்றும், இத்திட்டத்தினை 2014–2015 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்திடலாம் என்றும், இத்திட்டத்திற்கென ஒரு பள்ளிக்கு 4 ஆசிரியர்கள் வீதம் கணக்கில் கொள்ளப்படின், 54 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு (ஒரு ஆசிரியருக்கு ரூ.5000/– வீதம்) ஆண்டொன்றுக்கு கூடுதலாக ஏற்படும் செலவு ரூ.10,80,000/–ஐ (ரூபாய் பத்து இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) வழங்கவும் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கி வரும் அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மாணவ, மாணவியரை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் பட்டதாரி / முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) பரிசுத் தொகை வழங்கவும், இத்திட்டத்தினை 2014–2015 ஆம் கல்வியாண்டிற்கு 2015–ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறும் பொதுத் தேர்வின் தேர்ச்சியினை கணக்கில் கொண்டு செயல்படுத்திடவும் அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது – 101 – சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – I திட்டத்தில் சேராதது AE சீர்மரபினர் பள்ளிகள் – 59 பரிசுகளும் வெகுமதிகளும்". (த.தொ.கு – 2225 80 101 AE 5904).

5. இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, 2015–2016– ஆம் நிதியாண்டிற்கான வரவு–செலவு திட்டத்தில் ரூ.10,80,000/–ஐ சேர்க்க உரிய கருத்துருவினை நிதித்துறைக்கு அனுப்பும்படி மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6.இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண்.70575/பி,மிபி/2014–01, நாள் 18.12.2014–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்,
சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18/பெயரில்
மாநில கணக்காயர், (தணிக்கை–I), சென்னை–18/(பெயரில்).
மாநில கணக்காயர், (தணிக்கை–II) சென்னை–18/(பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு), சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை–20.
மாவட்ட ஆட்சியர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல்.
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை–20.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல்.
கருவூல அலுவலர், தேனி மற்றும் திண்டுக்கல்
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்,
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
நிதித்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினா நலத்துறை, சென்னை–9.
நிதி(பிமிபி/வரவு–செலவு (பொது I மற்றும் II)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு /உபரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

22/12/14
பிரிவு அலுவலர்